47

1730

உ

பரமபதி துணை.

திருநெல்வேலிஜில்லா

சிவலப்பேரி மலையிலெழுந்தருளிய

# பூலாருடையவர்பேரிற்

# ஆசிரியப் பதிகம்.

முதுகுளத்தூர்,

அருணாசலம்பிள்ளையவர்கள் குமாரர்

வித்துவான்

சுப்பிரமணியபிள்ளையவர்களியற்றியது

முதுகுளத்தூர் சாப்புக்கடை

ச. க. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களும்,

ஷையூர் ஜவுளிக்கடை

சே. பே. பூலாருசாமிபிள்ளையவர்களும்

...டுக்கொண்டபடி

...வடக்குமாசிவீதி,

...ர் விலாசம் பிரசிற்

...க்கப்பெற்றது.

...1917.

3 - JUL 1917 MADRAS

026:38.2119bSP
N17
17564

உ

குமரன்றுணை.

# சிவலப்பேரி மலையில் வீற்றிருக்கும்

# பூலாருடையவர்மீது

# ஆசிரியப்பதிகம்.

MADRAS

## காப்பு

மலையானை யருள்புரிக மலையானை யெமக்காக
வருமெய்ஞ் ஞானச்
சிலையானைச் சிவபூலா ருடையானைச் செந்தமிழ்ப்பாச்
சேர்ப்ப தற்கோர்
தலையாறு முகத்தானைச் சமர்சூர்க் கிளையானைத்
தம்பி யாய்க்கொள்
தலையானை முகத்தானை சலசமலர்ப் பதத்தானைத்
தலைமேற் கொள்வாம்.

முத்திதரும் வித்தா யெழுந்தமெய்ஞ் ஞானமே
முச்சுடரு மற்று முள்ள
முப்பத்து முக்கோடி தேவரிக் திரர்முனிவர்
முதுமறை வலாளர் சித்தர்
எத்திசையி னும்பரவி மலர்மாரி மாரியென
இறைவனின் பத மலரினில்

1720
894.8111



இரவுபக லனுதினங் கரமலர் சொரிந்திரய
மெரியின்மெழு கெனக்கு ழைந்து
பத்தியுட னுதரித் தேற்றுவார்க் கருளுதவு
பகரரிய வேத முதலே
பார்த்தவிட மெங்கணுந் தீர்த்தநிலை யல்லாற்
பார்க்கவொரு தெய்வ மிலையாற்
சித்தமகிழ் வோடுவந் தென்மனத் துயர்தனைத்
தீர்த்தா ளித் தருள்வையே
சிவலப் பதிமலையில் மேவுகற் பகமனைய
தேவபூ லாரு முனியே. (1)

வேதவே தாந்தபரி பூரண சதானந்த
மெய்ப்பரா பரம தான
வித்தக விநோதசற் சனகுணா தீதநிறை
விண்ணவர்க் கரிய பொருளே
போத[illegible]மை யானநற் கண்டுமெப்
போதவெங் கலியெ னும்பேய்
போராடு தென்செய்வே னையகோ ஐயகோ
புகலென்ப தனுவு மிலையே
காதவனை யல்லதெவர்க ளாதரித் திடுவரின்
[illegible]ளிலவுந் துதவி புரிவாய்
நாகங் கடந்துமப் பாலுங் தொளாவியுயர்
கரும்பிரச மணம் விரிந்த

17564
சென்னை-60

சீதச் செழுங்காவி நிற்குயில்கள் கூவமயில்
சிறைவிரித் தாடல் புரியும்
சிவலப் பதிமலையில் மேவுசற் பகமனைய
தேவபூ லாரு மணியே. (2)

மின்னொளி விரிந்தபொன் மேனியுங் கலாமதி
விளங்குதிரு வதன வழகும்
மென்முடி யணிந்தநவ ரத்தின கிரீடமும்
விளங்குதிண் சயில மார்பில்
பொன்னொளி விரிந்தமுன் னூலும் மணிக்குழை
பொருந்துகுண் டலமு மென்மேல்
பொலிவனச மலர்விரிந் திலகுசெங் கைகளும்
பூரணபொற் கலைக ளென்னுங்
கன்னியர்கள் மனமகிழ்ந் திருபுறம் விளங்கவுங்
கனதைபெற வீற்றி ருந்து
கழல்பணிந் தடிபரவு மடியவர்கள் படுதுயர்
கடத்திகல் லருள் புரிகுவாய்
சென்னிவிண் முகடுலவு கன்னலுஞ் சென்னலுஞ்
செறிந்தபைஞ் சோலை சூழும்
சிவலப் பதிமலையில் மேவுகற் பகமனைய
தேவபூ லாரு மணியே. (3)

அனலினிடுமெழுகையொத் துடன்முழுது முருகிமலை
யருவியென விழி நீர்விழ
அகங்குழைந் தனிமயிர் பொடிப்பவாய் தழுதழுத்
தாணந்த பா வசமதாய்

O26:83.21196
N7

அனுதினந் துதிபரவு மெய்யன்ப ருக்குமெய்
யன்பனென வீற் றிருந்தே
அகமகிழ வேண்டுவ கொடுத்தருள்வை யானுநின்
னடியவரி லொருவ னலவோ
எனவெண்ணி டாமல்நீ சும்மா யிருப்பதென்
றென்றனுரை யேற விலையோ
யேழைக் கிரங்கிநீ யருள்புரிவை யென்பது
மென்னளவி லாத தென்னோ
திருமுவந் தபயம் புரிந்துநற் கதிசெலத்
திருவருட் கருணை புரிவாய்
சிவலப் பதிமலையில் மேவுகற் பகமனைய
தேவபூ லாரு மணியே. (4)

வாசமலர் கொண்டிலகு கொந்தளக பாரமும்
மதிநிலவு பரவு முகமும்
வரிச்சிலை கிடந்தொளிரு புருவமும் பவளமணி
வைத்திலகு வாய் முறுவலும்
காசார்ந்த குங்குமக் கொங்கையுங் கொண்டிலகு
கன்னியர்கள் மாயல் வலையில்
கட்டுண்டு துறவித லாதிநற் குணமெலாம்
கைவிட்டு நிலைக லங்கி
ஆசார மாயன்பு கொண்டுபணி புரிவதற்
கறிவிலா தலையு மென்னை
ஆதரவு செய்தருள்வை குடிமுழுவ தும்புரந்
தாழுமொரு குல தெய்வமே

175647

## ஆசிரியப்பதிகம்.

தேசாதி தேசரும் தேவரும் முனிவரும்
சித்தரும் போற்றி வாழ்த்துஞ்
சீவலப் பதிமலையில் மேவுகற் பகமனைய
தேவபூ லாரு மணியே. (5)

வாசநீ கொண்டமலை யடிவார மெங்கணு
மாகமுகு தென்னை புன்னை
வருக்கைகத லிக்கன்னல் சென்னலும் வாசமொடு
மன்னித் திரண் டுயர்ந்த
வாசவ னேறுவா கனமண்ட லம்வரை
வளர்ந்துமென் மேலு மோங்கும்
வனசமலர் பூத்துநிறை வாவியும் நந்தன
வனங்களுங் கிள்ளை பூவை
பாசமுட னுனதடிய ருன்மீது பாமாலை
பாடுவது ணர்ந்தென் னுளும்
பகலிரவு பாடவும் மயில்கள்கூத் தாடவும்
பசியகுயி லினங் கூவவும்
தேசிலகு சித்திர வளம்யாவர் கண்டுறைசெய்
வார்சிறிய னறிய வசமோ
சீவலப் பதிமலையில் மேவுகற் பகமனைய
தேவபூ லாரு மணியே. (6)

காலமதி லுண்டான நால்வகைச் சாதியுந்
தங்கள்குல தெய்வ மெனவே
தப்பாமல் வந்துபங் குனியுத் திரமதனில்
சன்னதியின் முன்ன தாக

பாலிட்ட பொங்கல்வைத் தபிஷேக லாகவே
தனம்பண்ணி மலர்க ளாலே
பத்திவில காதுநல் லருச்சனை புரிந்துளம்
பரவச மடைந்து பணிய
காலாகா லத்திலே செய்கொம்பு மாடனைக்
கண்டுதெரி சிக்க வன்பர்
கைகுவித் தேநின் றவரவர் மனக்குறை
சமறிடக் கேட்டு வந்து
சிலமுட னவர்கள்வினை தீர்த்தா க்ஷித்திடுந்
தேவனே யெனை யாண்டருள்
சிவலப் பதிமலையில் மேவுகற் பகமனைய
தேவபூ லாரு மணியே- (7)

கஞ்சமல ரினுமிருது வானவுன் னிருகழல்
கருதித் துதிக்கு மன்பர்
கருத்திலுறு துயர்தனை யகற்றியருள் வாயெனக்
கழறுமொழி கேட்க விலையா
மஞ்சள்மஞ் சணைபுஷ்ப மணிபேச்சி ராக்கச்சி
மனமது மகிழ்ந்து வுன்பால்
வழுத்தவிலை யாசொம்பு மாட ளுடு சன்னாசி
மற்றுமுள தெய்வ மெல்லாம்
அஞ்சலித் தேயெனது குறைசொல்ல வில்லையா
ஆண்டவா யென் மீதிலுன்
அன்புவர வில்லையா யான்செய்யுங் குற்றங்கள்
யாவும் பொருத்து எந்தன்

செஞ்சொல்மொழி கேட்டுனது மனமிளகி யன்பொடு
சிறியேனை யாட் கொள்ளுவாய்
சிவலப் பதிமலையில் மேவுசற் பசுமனைய
தேவபூ லாரு மணியே. (8)

எங்கெங்கு முனதுபெய ரிசைத்துரு வமைத்துபல
யிடங்களிற் கோயில் கட்டி
எத்தனை கோடிஜன மோபணிய வெண்ணினு
மிங்குவந் துனது பாதப்
பங்கயம் பணிந்துபதி சென்றவர்கள் கோயிலிற்
பண்ணுவர்கள் பூசை யிந்த
பதிவரா தேபூசை பண்ணிலருள் வராதெனப்
பசுவர்க ளாதி முதல்நீ
தங்குமித் தலத்தில்வந் தென்மனச் சஞ்சலஞ்
சாற்றியிது நாள் வரையிலும்
சாமிநீ சும்மா யிருப்பதற மோநல்ல
தருணமிது தருண மையா
சிங்கார மாகநின் தேவிமா ருடன்வந்து
சிறியனுக் கருள் புரிகுவாய்
சிவலப் பதிமலையில் மேவுசற் பசுமனைய
தேவபூ லாரு மணியே. (9)

கதலிபல கனிகள்தரு மரங்கள்பூஞ் சோலையுங்
கழனிவிளை வோங்கு செந்நெல்
கவிந்திலகு சிவலப் பதியினில் மாறாத
கருணைகொண் டமரர் பரவ

பதியான கோயிலிற் பாவையர்க ளோடுநீ
பரிவுட னிருந்து மிந்தப்
பாரினுள்ளோரெலாம்பணிந்தவர்கள்வேண்டுவரம்
பாலித்தென் னாளும் நீயே
சதிராய குடிகளை தழைத்திடக் காத்தருள்வை
தயாபரா யிந்த வேளை
தருகாம லேமாட னொடுபேச்சி ராக்கியென்
தாயுநீ வந்து ஐயா
சிதையாது யென்மனந் திகையாது பேர்பெறச்
செய்வதுன் பார மன்றோ
சிவலப் பதிமலையில் மேவுகற் பகமனைய
தேவபூ லாரு மணியே. (10)

முற்றிற்று.

175647

